# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 1076/1 – 1999 අප්‍රේල් 19 වැනි සඳුදා – 1999.04.19

*1076/1 ஆம் இலக்கம் – 1999 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 19 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) — பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

*ச. வ. பீ. 21/78 iv*

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 18 ஆம் பிரிவின்கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஆக்கப்பட்ட கட்டளைச் சட்டம்.

செயலாளர்,
பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.

கொழும்பு,
*1999, ஏப்பிறல் 09.*

### *கட்டளைச் சட்டம்*

1. இக்கட்டளைச் சட்டம் 1999 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, நூலக மற்றும் தகவல் அறிவியல்கள் தேசிய நிறுவகக் கட்டளைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம் என்பதுடன் அது 1999, ஏப்பிறல் 20 ஆந் தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

2. இக்கட்டளைச் சட்டமானது, (இதனகத்தின்பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 24அ என்னும் பிரிவின்கீழ் அமைச்சரினால் ஆக்கப்பட்ட 1998 ஒற்றோபர் 21 ஆந் தேதிய, கட்டளைமூலம் தாபிக்கப்பட்ட (இதனகத்தின் பின்னர் "நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நூலக மற்றும் தகவல் அறிவியல் கள் தேசிய நிறுவகத்துக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

3. இந்நிறுவகமானது (இதனகத்தின் பின்னர் "பல்கலைக்கழகம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக இருத்தல் வேண்டும்.

4. சட்டத்தினதும், ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கும் (இதனகத்தின் பின்னர் "ஆணைக்குழு" எனக் குறிப்பீடு செய்யப்படும்)பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தத்துவங்களுக்கும் கடமைகளுக்கும் பணிகளுக்கும் அமைவாக, நிறுவகம் பின்வரும் தத்துவங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் :-

(அ) மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுதல் ;

(ஆ) நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் விதப்புரையின் மீது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான நூலக மற்றும் தகவல் அறிவியல்களின் அத்தகைய கிளைகளில் போதனை மற்றும் பயிற்சி வழங்குதலும் ஆராய்ச்சி செய்தலும் ;



குறிப்பு.– 1075/1 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி தொடரின் இறுதி இல. 1075/11.

(இ) நூலக மற்றும் தகவல் அறிவியல்களில் வழங்கப்படவேண்டிய பட்டப்பின் படிப்புப் பட்டங்களையும், திப்புளோமாக்களையும் சான்றிதழ்களையும் வேறு கல்வித்துறைசார் சிறப்புக்களையும் பல்கலைக் கழகத்தின் அங்கீகாரத்துடன், ஆணைக்குழுவின் ஒருப்பாடடுடன் தீர்மானித்தல் ;

(ஈ) நூலக மற்றும் தகவல் அறிவியல்களில் தேர்ச்சி அடைந்துள்ள ஆட்களைக் கண்டறியும் நோக்கத்துக்காக, பல்கலைக்கழகத்தின் அங்கீகாரத்துடன் பரீட்சைகளை நடாத்துதலும் அத்தகைய பரீட்சைகளில் சித்தியடைந்து நிறுவகத்தின் ஆலோசனையுடன் துணைவிதிகள்மூலம் பல்கலைக்கழகம் விதித்துரைக்கப்படக்கூடியவாறாக அத்தகைய வேறு நிபந்தனைகளைத் திருப்திசெய்து கொண்டுள்ளவர்களான ஆட்களை, பல்கலைக்கழகத்தின் பட்டப்பின்படிப்புப்பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்வித்துறைசார் சிறப்புக்கள் அளிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்களெனப் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தலும் ;

(உ) நிறுவகத்தின் குறிக்கோள்களை ஒத்த அல்லது கணிசமானளவு ஒத்த குறிக்கோள்களைக்கொண்ட இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களுடன் அல்லது நிறுவனங்களுடன், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் கல்விமான்கள் ஆகியோரின் பரிமாற்றம் மூலம் அல்லது வேறுவகையாக ஒத்துழைத்தல் ;

(ஊ) பல்கலைக்கழக மூதவையினால் அங்கீகரிக்கப்படும் நோக்கங்களுக்காக, துணைவிதிகளினால் விதித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பரீட்சைகளுக்கும் நிறுவகத்திலுள்ள போதனா அல்லது கற்கைக் காலப்பகுதிகளுக்கும் அல்லது அதற்கான அத்தகைய பாகத்திற்கும் சமமானதாக இருக்கும், நிறுவகத்தில் அனுமதிநாடும் ஆட்களினால் சித்தியெய்தப்பட்ட பரீட்சைகளையும் பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக்கழக மட்ட கற்கை இடங்களிலும் பின்பற்றப்பட்ட போதனா அல்லது கற்கைக் காலப்பகுதிகளையும் விதந்துரைத்தலும் எந்நேரத்திலும் அத்தகைய அங்கீகாரத்தை மீளப்பெறுமாறு விதந்துரைத்தலும் ;

(எ) நிறுவகத்தின் நோக்கத்துக்காக நூலகங்களையும்போதனா, பயிற்சி அல்லது ஆராய்ச்சி நோக்கங்களுக்காக வேறு கட்டிடங்களையும் கட்டியமைத்தல், உபகரணமளித்தல் மற்றும் பராமரித்தல் ;

(ஏ) அத்தகைய போதனா முறையை ஆரம்பித்தலையும் நிறுவகத்தின் நோக்கத்துக்காகத் தேவைப் படக்கூடியவாறான ஆசிரியர் நிருவாக மற்றும் ஏனைய பதவிகளையும் அத்தகைய பதவிகளை ஒழிப்பதனையும் அல்லது இடைநிறுத்துவதனையும் பல்கலைக்கழகததுக்கு விதந்துரைத்தல் ;

(ஐ) இணையுரிமைப் பரிசில்கள், புலமைப் பரிசில்கள், சிறப்புப் பரிசில்கள், பணவுதவிகள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசுகள் என்பவற்றை ஆரம்பித்து வழங்குதல் ;

(ஒ) நிறுவகத்துக்கு வெளியே உள்ள இடங்களில் கற்கைநெறிகளை நடாத்துவதற்கு ஏற்பாடு செய்யும் துணைவிதிகளுக்கிணங்க நிறுவகத்துக்கு வெளியே உள்ள இடங்களில் கற்கைநெறிகளை அல்லது அத்தகைய கற்கைநெறிகளின் பாகங்களை நடாத்துவதற்கான ஒழுங்குகளைச் செய்தல் ;

(ஓ) கட்டணங்களைக் கோரி அறவிட ஏற்பாடுசெய்யும் ஏதேனும் விதிக்கிணங்க கட்டளைகளைக் கோரிப் பெறுதல் ; அத்துடன்

(ஔ) நிறுவகத்தின் தத்துவங்களைப் பிரயோகிக்கையில் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்தல்.

5. பின்வருவோர் நிறுவகத்தின் அலுவலர்களாதல் வேண்டும் :-

(i) பணிப்பாளர் ; அத்துடன்

(ii) இப்பந்தியின் நோக்கத்துக்காக அப்பதவியை வகிப்பவர் ஓர் அலுவலராக இருக்கவேண்டுமென, கட்டளைச் சட்டத்தினால் வெளிப்படுத்தப்பட்ட வேறு ஏதேனும் பதவியை வகிப்பவர்.

6. (1) நிறுவகத்தின் முதலாவது பணிப்பாளர் இக்கட்டளைச் சட்டம் நடைமுறைக்கு வருவதன்மூலம் ஆணைக் குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும். அடுத்துவரும் ஒவ்வொரு பணிப்பாளரும் நிறுவகத்தின் முகாமைச் சபையினால், விதந்துரைக்கப்படும் நூலக மற்றும் தகவல் அறிவியல்துறையில் தகுதிவாய்ந்த மூவரைக் கொண்ட குழாத்திலிருந்து ஆணைக்குழுவினால் நியமிக்கப்படுதல் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், ஆள் எவரும் அடுத்தடுத்த இரண்டு தவணைகளுக்கு மேற்பட நிறுவகத்தின் பணிப்பாளராக நியமிக்கப்படுதல் ஆகாது.

(2) பணிப்பாளர், முன்னதாகவே பதவியை வறிதாக்கினாலொழிய, அல்லது (3) ஆம் உட்பந்தியின்கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, அவர் நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலப் பகுதியொன்றுக்கோ அல்லது அவர் அறுபத்தைந்து வயதைப் பூர்த்திசெய்யும்வரை இவற்றில் எச்சம்பவம் முதலில் நிகழுகின்றதோ அது வரையிலான காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(3) அந்நோக்கத்துக்கெனக் கூட்டப்பட்ட ஒரு விசேட கூட்டத்தில், முகாமைச்சபையின் மொத்த உறுப்பாண்மையின் மூன்றில் இரண்டுக்குக் குறையாதோரால் நிறைவேற்றப்பட்ட கண்டனவாக்கொன்றின்மீது முகாமைச்சபையின் விதப்புரையின்மேல் ஆணைக்குழுவின் தவிசாளரினால் பணிப்பாளர் பதவியிலிருந்து அகற்றப்படுதல் வேண்டும். அத்தகைய விசேட கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள், தம்மிடையேயிருந்து பணிப்பாளர் தவிர்ந்த ஆளொருவரை அத்தகைய விசேட கூட்டத்தில் தலைமைதாங்குவதற்கெனத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(4) தாமாகவே பதவிவிலகுகின்ற அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்ட பணிப்பாளர், பணிப்பாளராக அவரது நியமனத்துக்கு நேர்முன்னர் உயர்கல்வி நிறுவனத்தின் பணியாட்டொகுதி உறுப்பினர் ஒருவராக இருந்தால், அவர் தமது அறுபத்தைந்தாவது வயதைப் பூர்த்திசெய்யவில்லையாயின், அத்தகைய உயர்கல்வி நிறுவனத்திலுள்ள தமது நிலையான பதவிக்குத் திரும்பிச்செல்ல முடியும்.

(5) பணிப்பாளர், சுகவீனம் காரணமாக, இலங்கையில் இல்லாமை காரணமாக அல்லது வேறு ஏதேனும் காரணத்துக்காகத் தமது பதவிக்குரிய கடமைகளைத் தற்காலிகமாகப் புரிய முடியாதவராக இருந்தால், அத்தகைய இயலாமை சம்பவித்த ஏழு நாட்களுக்குள்ளாக, ஆணைக்குழுவானது, பணிப்பாளரது பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கு அது பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரை, பல்கலைக்கழகப் பதிவாளர் அத்தகைய பதவிக்குரிய வழமையான கடமைகளைப் புரிதல் வேண்டும்.

(6) பணிப்பாளர் பதவியில் ஏதேனும் வெற்றிடம் ஏற்பட்டால், ஆணைக்குழுவானது, அத்தகைய வெற்றிடம் ஏற்பட்டதன்மேல், (1) ஆம் உட்பந்தியின்கீழ் நிரந்தர நியமனம் செய்யப்படும்வரை அப்பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு அது பொருத்தமானதெனக் கருதக்கூடியவாறான அத்தகைய ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும். அத்தகைய ஒழுங்குகள் செய்யப்படும்வரை பதிவாளர் அத்தகைய பதவிக்குரிய வழமையான கடமைகளைப் புரிதல் வேண்டும்.

7. (1) பணிப்பாளர் நிறுவகத்தின் பிரதான நிறைவேற்று அலுவலராகவும் பிரதான கல்வித்துறைசார் அலுவலராகவும் இருத்தல் வேண்டும். அவர் முகாமைச் சபையின் பதவிவழி உறுப்பினராகவும் நிறுவகத்தின் கல்விக் குழுவின் பதவிவழி உறுப்பினராகவும் இருத்தல் வேண்டும். நிறுவகத்தின் ஏதேனும் வேறு அதிகார சபையின் அல்லது குழுவின் எக்கூட்டத்திலும் சமுகமாயிருந்து உரையாற்றுவதற்கு அவர் உரித்துடையவராவார். ஆனால் அத்தகைய வேறு அதிகார சபையின் அல்லது குழுவின் உறுப்பினர் ஒருவராக அவர் இருந்தாலொழிய, எவையேனும் அத்தகைய கூட்டங்களில் வாக்களிப்பதற்கு உரித்துடையவராகார்.

(2) முகாமைச் சபையினால் அதன் சார்பில் அவருக்குக் காலத்துக்குக் காலம் சட்டபூர்வமாக விடுக்கப்படக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கிணங்க, இக்கட்டளைச் சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகள், அவை நிறுவகத்துடன் தொடர்புபட்டிருக்குமளவுக்கு, முறையாக அவதானிக்கப்படுகிறதா என்பதை உறுதிப்படுத்தல், பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும் என்பதுடன் அந்நோக்கத்துக்கென அவர் அவசியமெனக் கருதக்கூடிய அத்தகைய எல்லாத் தத்துவங்களையும் கொண்டிருத்தல் வேண்டும் என்பதுடன் அவற்றைப் பிரயோகிக்கலாம்.

(3) முகாமைச் சபையினதும் ஒவ்வொரு கல்விக்குழுவினதும் முடிவுகளுக்குப் பயன்கொடுப்பது அல்லது பயன்கொடுக்கப்படுவதை உறுதிசெய்வது பணிப்பாளரின் கடமையாதல் வேண்டும்.

(4) பணிப்பாளர் நிறுவகத்தின் கணக்கீட்டு அலுவலராக இருத்தல் வேண்டும்.

(5) நிறுவகத்துக்குள்ளாக ஒழுக்காற்றைப் பேணுவதற்குப் பணிப்பாளர் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும்.

8. நிறுவகத்தின் அதிகார சபைகள் பின்வருவனவாதல் வேண்டும் :–

(i) முகாமைச் சபை ;

(ii) கல்விக்குழு ;

(iii) ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு குழுக்கள்.

9. (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) முகாமைச் சபை, நிறுவகத்தின் கல்விசார் மற்றும் நிறைவேற்றுக் குழுவாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அது பின்வரும் ஆட்களைக் கொண்டிருத்தலும் வேண்டும் :–

(1) பின்வரும் பதவிவழி உறுப்பினர்கள் :–

(அ) பணிப்பாளர் ;

(ஆ) உயர்கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(இ) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்துறை என்னும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் அல்லது அவரது நியமத்தர் ;

(ஈ) 1984 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க இலங்கை கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பேரவையினால் தாபிக்கப்பட்ட கணனி மற்றும் தகவல் தொழில்நுட்பப் பேரவையின் (சின்டெக்) தலைவர் அல்லது அவரது நியமத்தர் ;

(உ) கொழும்பு பல்கலைக்கழக, கல்விபீடத் தலைவர் ;

(ஊ) 1970 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க இலங்கைத் தேசிய நூலகச் சேவைகள் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை தேசிய நூலகச் சேவைகள் சபைப் பணிப்பாளர் ;

(எ) இலங்கை நூலக கழகத்தின் தலைவர் ;

(ஏ) பல்கலைக்கழகங்களுக்கிடையிலான நூலகர்கள் குழுவின் தலைவர்.

(2) பின்வரும் ஏனைய உறுப்பினர்கள் :–

(அ) பல்கலைக்கழகங்களுக்கிடையிலான நூலகர்கள் குழுவினால் தமது உறுப்பினர்களிலிருந்து இரு வருட காலத்திற்கு பெயர்குறித்து நியமிக்கப்படும் இரண்டு உறுப்பினர்கள் ;

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆட்கள் எவரும் அடுத்தடுத்த இரண்டு தவணைகளுக்கு மேற்படப் பெயர்குறித்து நியமிக்கப்படுதலாகாது.

(ஆ) கல்வி, உயர்தொழில், விஞ்ஞானம் அல்லது நிருவாகம் ஆகிய துறைகளில் அதிசிறந்த சேவை புரிந்துள்ள ஆட்களிடையேயிருந்து ஆணைக்குழுவினால் மூன்று வருட காலத்திற்கு நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்கள்.

10. (1) சபையின் தலைவர், உறுப்பினர்களினால் தம்முள்ளிருந்து தெரிவுசெய்யப்படுதல் வேண்டும் ; அவர் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமைதாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்தில் தலைவர் தலைமைதாங்க முடியாதவிடத்து, அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் தம்முள் ஒருவரை அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்கவெனத் தெரிவுசெய்தல் வேண்டும்.

(2) தலைவர், அவர் தெரிவுசெய்யப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடப்படும் ஒருவருட காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் அவர் மீளத் தெரிவுசெய்யப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

(3) பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், முன்னதாகவே அவர் பதவியை வறிதாக்கினாலொழிய, விடயத்திற்கேற்றாற்போல, அவர் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து கணிக்கப்படக்கூடியவாறான, விடயத்திற்கேற்றாற்போல இரண்டு ஆண்டுகள் அல்லது மூன்று ஆண்டுகள்கொண்ட காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும் என்பதுடன், அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய, மீளப் பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது மீள நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர் ஆதலும் வேண்டும் :

ஆயின், எவ்வாறாயினும், எவரேனும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் தமது பதவிக்காலம் முடிவடைவதன் முன்னர் தமது பதவியை வறிதாக்கினால், அவரை அடுத்துறுபவர், முன்னதாகவே தமது பதவியை அவர் வறிதாக்கினாலொழிய, விடயத்திற்கேற்றாற்போல அவர் பெயர்குறித்து நியமிக்கப்படும் அல்லது நியமிக்கப்படும் தேதியிலிருந்து கணிக்கப்படக்கூடிய, அவரின் முற்போந்தவரின் பதவிக்காலத்தின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும் :

ஆயின், மேலும் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட ஒருவர், உறுப்பினர் எந்த அந்தஸ்தை வகிப்பதன் பயனைக்கொண்டு சபையின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்றாரோ அந்த அந்தஸ்தை வகிக்கும்வரை பதவிவகித்தல் வேண்டும்.

(4) சபையின் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர் தமது கைப்பட பணிப்பாளருக்கு முகவரியிட்டெழுதும் கடிதம்மூலம் தமது பதவியைத் துறக்கலாம்.

(5) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் தமது கைப்பட ஆணைக்குழுவின் தலைவருக்கு முகவரியிட்டெழுதும் கடிதம் மூலம் தமது பதவியைத் துறக்கலாம்.

(6) வராமைக்கான லீவு இல்லாமல் சபையின் அடுத்தடுத்த மூன்று கூட்டங்களுக்குச் சமுகமளிக்கத் தவறுகின்ற சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் சபையின் உறுப்பினர் ஒருவராகத் தமது பதவியை வறிதாக்கியுள்ளவராகக் கருதுப்படுதல் வேண்டும் என்பதுடன், ஏற்படும் வெற்றிடத்தை நிரப்புவதற்கென ஆள் ஒருவரை ஆணைக்குழு 9 (2) (ஆ) எனும் பந்தியின் ஏற்பாடுகளைக் கருத்திற்கொண்டு நியமித்தலும் வேண்டும்.

(7) சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரின் ஆலோசனையுடன் அமைச்சர் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஊதியம் அல்லது படித்தொகைகள் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(8) சபையின் கூட்டமெதற்குமான கூட்ட நடப்பெண் அதன் மொத்த உறுப்பாண்மையில் மூன்றிலொன்றாதல் வேண்டும்.

(9) சபையானது, அவசியமான போதிலெல்லாம் கூடுதல் வேண்டும்; ஆயின் எவ்வாறாயினும் ஒவ்வோர் ஆண்டிலும் எட்டுத் தடவைகளுக்குக் குறையாமல் கூடுதல் வேண்டும்.

(10) பணிப்பாளர், அவர் அவசியமெனக் கருதும்போதிலெல்லாம் அல்லது சபையின் மொத்த உறுப்பாண்மையில் மூன்றிலொன்றுக்குக் குறையாதோரிடமிருந்து எழுத்திலான வேண்டுகோளை அவர் பெற்றுக்கொண்ட ஒரு வாரத்துக்குள்ளாக சபையின் விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

11. (1) சட்டத்தினதும் ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, சபையானது, இக்கட்டளைச்சட்டத்தினால் நிறுவகத்துக்கு அளிக்கப்பட்ட அல்லது அதன்மீது சுமத்தப்பட்ட அல்லது குறித்தொதுக்கப்பட்ட தத்துவங்களைப் பிரயோகித்தலும், கடமைகளைப் புரிதலும் பணிகளை நிறைவேற்றுதலும் வேண்டும்.

(2) ஓராம் உட்பந்தியினால் சபைக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, சபையானது பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும் புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும் :

(அ) நிறுவகத்தின் ஆதனத்தையும் நிதிகளையும் வைத்திருத்தலும் கட்டுப்பாடு செய்தலும் நிருவகித்தலும் ;

(ஆ) சட்டத்தினது அல்லது ஏதேனும் தோதான சாதனத்தினது ஏற்பாட்டுக்கிணங்க, நிறுவகம் சம்பந்தமான சகல கருமங்களையும் ஒழுங்குபடுத்தலும் தீர்மானித்தலும் ;

(இ) ஏதேனும் குறிப்பிட்ட நோக்கத்திற்காக நிறுவகத்தின் வசம் விட்டுவைக்கப்பட்டுள்ள எவையேனும் நிதிகளை நிருவகித்தல் ;

(ஈ) ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன், மரணசாதனக் கையளிப்புகள், நன்கொடைகள் அல்லது நிறுவகத்துக்குச் செய்யப்படும் வேறு ஆதனக்கொடைகள் என்பவற்றைப் பெறுதலும் ஏற்றுக்கொள்ளலும் ;

(உ) நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையையும் வருடாந்தக் கணக்குகளையும் பரிசீலித்தலும் அத்தகைய அறிக்கையையும் அத்தகைய கணக்குகளையும் பல்கலைக்கழகத்துக்கும் ஆணைக்குழுவுக்கும் சமர்ப்பித்தலும் ;

(ஊ) நிறுவகத்தின் நிதிசார் மதிப்பீடுகளைத் தயாரித்தலும் அத்தகைய மதிப்பீடுகளைப் பல்கலைக்கழகத்துக்கும் ஆணைக்குழுவுக்கும் சமர்ப்பித்தலும் ;

(எ) நூலக மற்றும் தகவல் அறிவியல்களில் வழங்கப்படவேண்டிய பட்டப்பின்படிப்புப் பட்டங்களையும் திப்புளோமாக்களையும் சான்றிதழ்களையும் ஏனைய கல்வித்துறைசார் சிறப்புப் பட்டங்களையும், பின்பற்றப்படவேண்டிய கற்கைநெறிகளையும் பயிற்சிகளையும், அத்தகைய பட்டங்களையும் திப்புளோமாக்களையும் சான்றிதழ்களையும் வேறுகல்வித்துறைசார் சிறப்புக்களையும் பெறவிரும்பும் மாணவர்களினால் சித்தியெய்தப்படவேண்டிய பரீட்சைகளையும் திருப்தி செய்யப்படவேண்டிய ஏனைய நிபந்தனைகளையும் கல்வித் துறைசார் குழுவின் ஆலோசனையுடன் பல்கலைக்கழகத்துக்கு விதந்துரைத்தல் ;

(ஏ) துணைவிதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய துணைவிதிகளை ஆக்குதலும், அத்தகைய துணைவிதிகளின் வரைவுகளை, சட்டமாக்கப்படுவதற்கென பல்கலைக்கழகத்தின் பேரவைக்குச் சமர்ப்பித்தலும் ;

ஆயின், எவ்வாறாயினும், கல்வித்துறைக் குழுவின் அறிக்கைகளைப் பரிசீலித்ததன் பின்னர் தவிர, கற்கைநெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான துணைவிதி எதுவும் ஆக்கப்படுதலாகாது;

(ஐ) விதிகள் ஆக்கப்படவேண்டுமென அதிகாரமளிக்கப்பட்ட ஏதேனும் கருமம் தொடர்பில் விதிகளை ஆக்குதலும் சட்டமாக்கப்படுவதற்கென, விடயத்துக்கேற்றாற்போல பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு அல்லது மூதவைக்கு அத்தகைய விதிகளின் வரைபுகளைச் சமர்ப்பித்தலும்;

(ஒ) கல்வித்துறைக் குழுவிடமிருந்து பெற்றுக்கொண்ட அறிக்கைகளைப் பரிசீலித்த பின்னர், கற்கை நெறிகள் மற்றும் பரீட்சைகள் தொடர்பான ஒழுங்குவிதிகளை வரைதலும், அத்தகைய வரைவுகளைப் பல்கலைக் கழக மூதவைக்குச் சமர்ப்பித்தலும்;

(ஓ) நிறுவகத்தின் வேலையைக் கொண்டுநடாத்தும் நோக்கத்திற்குத் தேவைப்படும் கட்டிடங்கள், வளவுகள், தளபாடம், உபகரணம் மற்றும் வேறு பொருள்கள் என்பவற்றை ஏற்பாடு செய்தல்;

(ஔ) (i) நிறுவகத்தின் நோக்கங்களுக்காகத் தேவைப்படக்கூடியவாறான அத்தகைய போதனா, நிருவாக மற்றும் வேறு பதவிகளை ஏற்படுத்தலும் அத்தகைய பதவிகளை நீக்குதலும் அல்லது இடைநிறுத்தலும்; அத்துடன்

(ii) நிறுவகத்துக்கு நியமிக்கப்படவுள்ள ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் வேறு ஊழியர்கள் முதலியோருக்குத் தேவைப்படும் தகைமைகள் ;

என்பவற்றை ஆணைக்குழுவுக்கு விதந்துரைத்தல்;

(க) நிறுவகத்தின் தொழிலில் ஈடுபட்டுள்ள ஆட்களை இடைநிறுத்துமாறு, பதவிநீக்கஞ் செய்யுமாறு அல்லது வேறுவகையாகத் தண்டிக்குமாறு பல்கலைக்கழகத்துக்கு விதப்புரைகளைச் செய்தல்;

(ங) நிறுவகத்தின் பரீட்சகர்களாக நியமிக்கப்படுவதற்குப் பொருத்தமானவர்களான அத்தகைய ஆட்களைப்பற்றிப் பல்கலைக்கழகத்தின் பேரவைக்கு விதப்புரைகளைச் செய்தல்;

(ச) கல்வித்துறைக் குழுவின் ஆலோசனையுடனும் பல்கலைக்கழகத்தினதும் ஆணைக்குழுவினதும் ஒருப்பாட்டுடனும் நிறுவகத்தில் கற்கைநெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளுவதற்கான தேவைப்பாடுகளைத் தீர்மானித்தல்;

(ஞ) நம்பிக்கைப் பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின் 20 ஆம் பிரிவின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் நம்பிக்கைப்பொறுப்புப் பணங்களை முதலீடுசெய்வது சட்டபூர்வமானதாகவுள்ள ஏதேனும் பிணைப்பொறுப்பில், பிரயோகிக்கப்படா வருமானம் உட்பட, நிறுவனத்துக்குச் சொந்தமான எவையேனும் பணங்களை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் முதலீடு செய்தல்; அல்லது எவையேனும் அத்தகைய பணங்களை இலங்கையிலுள்ள அசைவுள்ள ஆதனத்தைக் கொள்வனவு செய்வதில் முதலீடுசெய்தல் அல்லது ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் வங்கியில் நிறுவகத்தின் நோக்கங்களுக்குத் தேவைப்படாத அத்தகைய பணங்களின் ஏதேனும் பாகத்தை நிலையான வைப்பில் இடுதல் ;

(ட) நிறுவகத்தின் வெவ்வேறு தத்துவங்களின் பிரயோகத்துக்கு, இக்கட்டளைச் சட்டத்திலோ அல்லது தோதான ஏதேனும் வேறு சாதனத்தில் வேறு வகையில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லையோ, அவ்வெல்லா வேறு தத்துவங்களையும் பிரயோகித்தல்:

ஆயின், ஏதேனும் கல்வித்துறை விடயம் பற்றி கல்வித்துறைக்குழுவானது அதன் அபிப்பிராயத்தைக் குறித்துவைத்து அதைச்சபைக்கு அனுப்பிவைப்பதற்குக் கல்வித்துறைக்குழுவுக்கு முதலில் சந்தர்ப்பமொன்று வழங்கப்பட்டிருந்தாலொழிய, ஏதேனும் கல்வித்துறை விடயம் தொடர்பில் தீர்மானம் எதுவும் சபையினால் நிறைவேற்றப்படுதலாகாது:

ஆயின், மேலும், அவ்வாறு நிறைவேற்றப்படும் தீர்மானம் எதன்மீதும், பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடன் தவிர, எச்செயலும் நிறைவேற்றப்படலாகாது.

இப்பந்தியில், "கல்வித்துறைவிடயம்" என்பது, கல்வித்துறைக் குழுவின் கட்டுப்பாட்டுக்கும் பொதுவான பணிப்புக்கும் அமைவான ஏதேனும் விடயம் எனப் பொருள்படும்.

12. (1) கல்வித்துறைக் குழுவானது, பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) பணிப்பாளர்;

(ஆ) நிறுவகத்தின் நிரந்தர கல்வித்துறைப் பணியாட்டொகுதி;

(இ) சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்டதாகக் கருதப்படும் பல்கலைக்கழகங்களின் நூலக மற்றும் தகவல் அறிவியல்கள் துறைகள் ஒவ்வொன்றினதும் தலைவர்கள்;

(ஈ) இலங்கை தேசிய நூலகச் சேவைகள் சபையின் பிரதிநிதி ஒருவர்;

(உ) இலங்கை நூலக கழகத்தின் பிரதிநிதி ஒருவர்;

(ஊ) தமது உறுப்பினர்களிடையேயிருந்து பல்கலைக்கழகங்களுக்கிடையிலான நூலகர் குழுவினால் (ஐயூசீஎல்) பெயர்குறித்து, இருவருட காலத்திற்கு நியமிக்கப்படும் இரு நூலகர்கள்;

ஆயின், எவ்வாறாயினும், அத்தகைய ஆட்கள் எவரும், அடுத்தடுத்து இரண்டு தவணைகளுக்கு மேற்படப் பெயர்குறித்து நியமிக்கப்படுதல் ஆகாது.

(எ) சபையினால் மூன்று வருடகாலத்திற்கு நியமிக்கப்படும் மூன்று உறுப்பினர்கள்; இவர்களுள் இருவர், தகவல் தொழில்நுட்ப துறையில் உயர்தொழில் தகைமை வாய்ந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

2. கல்வித்துறைக்குழு, சபையின் ஒருப்பாட்டுடன், குறிப்பிட்ட ஒரு நோக்கத்துக்காக விசேஷ காலப்பகுதிக்கு ஒருவரையோ பலரையோ கூட்டாகச் சேர்த்துக் கொள்ளலாம். ஆனால் அவ்வாறு சேர்த்துக்கொள்ளப்பட்ட ஆள் எவரும் கல்வித்துறையின் தேர்தலில் நிற்பதற்கோ அல்லது கல்வித்துறைக் குழுவின் ஏதேனும் கூட்டத்தில் வாக்களிப்பதற்கோ உரிமை உடையவராதலாகாது.

3. பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், அவர் ஏலவே பதவியை வறிதாக்கினாலன்றி, விடயத்திற்கேற்றாற்போல, அவர் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து கணக்கிடப்படும் விடயத்திற்கேற்றாற்போல இரண்டு வருட காலப்பகுதியொன்றிற்கு அல்லது மூன்று வருட காலப்பகுதியொன்றுக்கு பதவி வகித்தல் வேண்டும் என்பதுடன் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலன்றி மீளப்பெயர்குறித்து நியமிக்கப்படுவதற்கு அல்லது நியமிக்கப்படுவதற்குத் தகுதியுடையவராதலும் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும், பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் அவரது காலப் பகுதி முடிவடைவதன் முன்னர் பதவியை வறிதாக்கினால், அவரை அடுத்துறுகின்றவர், அவர் ஏலவே பதவியை வறிதாக்கினாலன்றி, பெயர்குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து கணக்கிடப்படும், அவரது முற்போந்தவரின் பதவிக் காலப்பகுதியின் முடிவுறாதெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்;

ஆயின், மேலும், பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், எந்த அந்தஸ்தின் பயனாக அவர் கல்வித்துறைக் குழுவின் உறுப்பினர் ஒருவராக இருக்கின்றாரோ அந்த அந்தஸ்தை அவர் கொண்டிருக்கும்வரை பதவி வகித்தல் வேண்டும்.

4. கல்வித்துறைக் குழுவின் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், பணிப்பாளருக்கு முகவரியிட்டு தமது கைப்பட எழுதுவதன் மூலம் தமது பதவியிலிருந்து விலகலாம்.

5. கல்வித்துறைக் குழுவின் ஏதேனும் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண், கூட்டுச்சேர்க்கப்பட்ட உறுப்பினர்கள், எவரேனும் இருப்பின் அவர்கள் நீங்கலாக, மொத்த உறுப்பாண்மையில் மூன்றில் இரண்டு பங்கினராதல் வேண்டும்.

6. கல்வித்துறைக்குழுவானது, அவசியமானபோதிலெல்லாம் கூடுதல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும் ஒவ்வோர் ஆண்டிலும் பத்துத் தடவைக்குக் குறையாமல் அது கூடுதல் வேண்டும்.

13. (1) சட்டத்தினதும், ஏதேனும் தோதான சாதனத்தினதும் ஏற்பாடுகளுக்கமைவாக, கல்வித்துறைக் குழு, நிறுவகத்தின் போதனை, கல்வி, ஆராய்ச்சி மற்றும் பரீட்சை என்பனமீது கட்டுப்பாட்டையும் பொதுப் பணிப்பையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(2) ஓராம் உட்பந்தியினால் அதற்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் பொதுத் தன்மைக்குப் பங்கமின்றி, கல்வித்துறைக் குழுவானது, பின்வரும் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் பிரயோகித்தலும், புரிதலும் நிறைவேற்றுதலும் வேண்டும்.

(அ) சபையினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தைப் பரிசீலித்தலும் அதன்மீது அறிக்கையிடலும் ;

(ஆ) கற்கைநெறிகள், போதனா நிகழ்ச்சித்திட்டம் அல்லது நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் பரீட்சைகள் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களின் மீதும் சபைக்கு விதப்புரைகளையும் அறிக்கைகளையும் சமர்ப்பித்தல் ;

(இ) ஏதேனும் விசேஷ விடயத்தின்மீது அல்லது விடயங்களின்மீது பரிசீலனை செய்து அறிக்கையிடும் நோக்கத்துக்காக, கல்வித்துறைக் குழுவின் உறுப்பினர்களாகவிராத ஆட்களை உள்ளடக்கும் குழுக்களை நியமித்தல் ;

(ஈ) கற்கை நெறிகளுக்கும் பரீட்சைகளுக்கும் மாணவர்களை அனுமதிப்பதற்கான தேவைப்பாடுகளைச் சபைக்கு விதந்துரைத்தல்

(உ) ஆசிரியர்களாகவும் பரீட்சகர்களாகவும் அங்கீகரிக்கப்படுவதற்குப் பொருத்தமானவர்களான அத்தகைய ஆட்களைச் சபைக்கு விதந்துரைத்தல் ;

(ஊ) கற்கைநெறிகள் தொடர்பாகவும் பரீட்சைகள் தொடர்பாகவும் ஒழுங்குவிதிகளை வரைதலும் அத்தகைய வரைவுகளைச் சபைக்குச் சமர்ப்பித்தலும்;

(எ) விதித்துரைக்கப்பட்ட பரீட்சைகளில் சித்தியடைந்த ஏனைய விதித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளையும் திருப்தி செய்து திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விச் சிறப்புக்கள் வழங்கப்படுவதற்குத் தகுதியுடையவர்களான ஆட்களைச் சபைக்கு விதந்துரைத்தல்;

(ஏ) இணையுரிமைப் பரிசில்கள், புலமைப்பரிசில்கள், புலமைச் சிறப்புகள், கல்வி உதவிப் பணங்கள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசுகள் என்பனவற்றுக்கான போட்டி முறையையும் நிபந்தனைகளையும் சபைக்கு விதந்துரைத்தல்;

(ஐ) இணையுரிமைப் பரிசில்கள், புலமைப் பரிசில்கள், புலமைச் சிறப்புகள், கல்வி உதவிப் பணங்கள், பதக்கங்கள் மற்றும் வேறு பரிசுகள் என்பன வழங்குவதற்குப் பொருத்தமான ஆட்களின் பெயர்களைச் சபைக்கு விதந்துரைத்தல்.

14. நிறுவகத்தின் நிதி ஆண்டு, அரசாங்கத்தின் நிதியாண்டு போன்ற அதே நிதியாண்டாதல் வேண்டும்.

15. (1) இதனகத்துப்பின்னர் "நிதியம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நூலக மற்றும் தகவல் அறிவியல்கள் தேசிய நிறுவக நிதியம் என அழைக்கப்படவேண்டிய நிதியமொன்றை நிறுவகம் கொண்டிருத்தல் வேண்டும்.

நிதியத்துக்குள் பின்வருவன செலுத்தப்படுதல் வேண்டும்:—

(அ) பாராளுமன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு நிறுவகத்தின் உதவிக்கான மானியங்கள் என ஆணைக்குழுவினால் பகிர்ந்தளிக்கப்படும் பணங்கள்;

(ஆ) ஏதேனும் தோதான சாதனத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க நிறுவகத்துக்குச் செலுத்தப்படவேண்டிய எல்லாக் கட்டணங்கள்;

(இ) அறக்கொடைகளிலிருந்து பெறப்படும் எல்லா வருமானங்களும்; அத்துடன்

(ஈ) எத்தன்மைத்தான ஏதேனும் மூலத்திலிருந்து நிறுவகத்துக்குக் கிடைக்கப்பெறும் அத்தகைய வேறு பணங்கள்.

(2) தோதான வருவாய்த் தலைப்புகளின்கீழ் வகுப்பாக்கம் செய்யப்பட்டு ஒரு குறிப்பிட்ட ஒரு மாதத்தில் நிதியத்துக்குள் செலுத்தப்பட்ட எல்லாப் பணத்தொகைகளினதும் பொழிப்பொன்று, அடுத்துவரும் மாதம் முடிவடையுமுன்னதாக தகவலுக்கென பணிப்பாளரினால் ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும்.

16. பின்வருவன பணிப்பாளரின் கடமைகளாதல் வேண்டும்:—

(அ) சபையினால் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் அத்தகைய முறையிலும் நிறுவனத்தின் கணக்குகளை வைத்திருத்தல்;

(ஆ) நிதியத்துக்குச் செலுத்தப்பட்ட எல்லாப் பணங்களையும் பெற்று முறையான கணக்குத் தலைப்புகளுக்கு அத்தகைய பணங்களை வரவுவைத்தல்;

(இ) அதிகாரமளிக்கப்பட்ட கொடுப்பனவுகள் எல்லாவற்றையும் செய்தல் ; அத்துடன்

(ஈ) ஆணைக்குழுவினால் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய மூன்றாண்டுகொருமுறையான மதிப்பீடுகளையும் அடுத்துவரும் ஆண்டுக்கான வருடாந்த நிதி ஒதுக்கீடுகளையும் சபைக்காகத் தயாரித்தல்;

ஆயின், எவ்வாறாயினும், குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காகச் செய்யப்பட்ட மானியங்களி லிருந்து அல்லது குறிப்பிட்ட குறிக்கோள்களுக்கான அறக்கொடைகளிலிருந்து பெறப்படும் வருமானம் நிறுவகத்தின் கணக்குகளில் தனிவேறாகக் கணக்கிடப்படுதல் வேண்டும் என்பதுடன் எந்நோக்கத்துக்காக அல்லது குறிக்கோளுக்காக அத்தகைய மானியங்கள் அல்லது அறக்கொடைகள் முறையே செய்யப்பட்டனவோ அந்நோக்கம் அல்லது குறிக்கோள் தவிர்ந்தவேறு ஏதேனும் நோக்கத்துக்கு அல்லது குறிக்கோளுக்கு அல்லது நிறுவகத்தின் பொது நோக்கங்களுக்காக இவ்வருமானத்திலிருந்து கொடுப்பனவு எதுவும் செய்யப்படுதலாகாது.

17. (1) நிறுவகமானது, வருடாந்தக் கணக்குக் கூற்றுக்களையும் அதன் செயற்பாடுகள் தொடர்பிலான புள்ளிவிவரங்களையும் ஆணைக்குழு காலத்துக்குக்காலம் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய படிவத்திலும் முறையிலும் அத்தகைய விவரங்களைக் கொண்டதாகவும் தயாரித்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் கணக்குப் புத்தகங்கள் நிறுவகத்தின் அலுவலகத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

18. (1) நிறுவகத்தின் பணியாட்டொகுதியானது, நிறுவகத்தின் தத்துவங்களையும் கடமைகளையும் பணிகளையும் வினைத்திறமையாகப் பிரயோகிப்பதற்கும் புரிவதற்கும் அவசியமானவர்கள் என பல்கலைக்கழகத்தின் ஒருப்பாட்டுடனும் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் கருதப்படும் அத்தகைய அலுவலர்களையும் ஆசிரியர்களையும் ஏனைய ஊழியர் களையும், கொண்டிருத்தல் வேண்டும்.

(2) நிறுவகத்தின் பணியாட்டொகுதியினர் பல்கலைக்கழகங்களிலிருந்து விடுவிப்பதன்மூலம் ஏற்பாடு செய்யப்படல் வேண்டும் அல்லது விடயத்துக்கேற்றாற் போல் ஆணைக்குழுவினால் அல்லது பல்லைக்கழகத்தினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(3) பல்கலைக்கழகமொன்றின் அலுவலர், ஆசிரியர் ஒருவர் அல்லது வேறு ஊழியர், முழுநேர அடிப்படையில் நிறுவகத்துக்குச் சேவைக்கென விடுவிக்கப்பட்டுள்ளவிடத்து. நிறுவகமானது அத்தகைய பல்கலைக்கழகத்திலுள்ள அவரது நிலையான பதவிக்குரிய சம்பளத்தையும் படிகளையும் அவருக்குக் கொடுத்தல் வேண்டும். வேறு ஏதேனும் விடயத்தில் நிறுவகமானது சம்பந்தப்பட்ட அலுவலருக்கு, ஆசிரியருக்கு அல்லது வேறு ஊழியருக்கு ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடனும் பல்கலைக்கழகத்தின் ஆலோசனையுடனும் அது தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய படிகளைக் கொடுக்கலாம்.

(4) நிறுவகத்தின் பணியாட்டொகுதி, பணிப்பாளரின் பணிப்புக்கும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டுக்கும் அமைந்ததாதல் வேண்டும்.

19. ஏவரேனும் ஆள், முறையாகத் தெரிவு செய்யப்பட்டாரா, நியமிக்கப்பட்டாரா, பெயர் குறித்து நியமிக்கப்பட்டாரா அல்லது கூட்டாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டாரா என்பது பற்றி அல்லது ஏதேனும் அதிகார சபையின் அல்லது வேறு குழுவின் உறுப்பினராக இருப்பதற்கு எவரேனும் ஆள் உரித்துடையவரா என்பது பற்றி ஏதேனும் சந்தேகம் எழுகின்றவிடத்து, அத்தகைய சந்தேகம் ஆணைக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்; அத்துடன் அதுபற்றிய அதன் முடிவு இறுதியானதாதல் வேண்டும்.

20. இக்கட்டளைச் சட்டம் நடைமுறைக்கு வந்ததன்மேல் நூலக மற்றும் தகவல் அறிவியல்களில் பட்டப்பின்படிப்புப் பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்வித்துறைச் சிறப்புக்கள் என்பன, நிறுவகத்தின் விதப்புரைகளின் மீது பல்கலைக்கழகத்தினால் பூரணமாக வழங்கப்படல் வேண்டும்.

ஆயின், எவ்வாறாயினும்—

அத்தகைய பட்டங்கள், திப்புளோமாக்கள், சான்றிதழ்கள் மற்றும் வேறு கல்விச் சிறப்புக்கள் என்பன, நிறுவகத்தினதும் பல்கலைக்கழகத்தினதும் உடன்பாட்டொழுங்குமூலம் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் உயர்தொழில்சார் குழுக்களினால் வழங்கப்படலாம்.

21. இக்கட்டளைச் சட்டத்தில் —

"தோதான சாதனம்" என்பது, சட்டத்திலுள்ள அதே கருத்தையே கொண்டிருத்தல் வேண்டும்;

"ஆணைக்குழு" என்பது, சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு என்று பொருளாகும்;

"உயர்தொழில்சார் குழு" என்பது, ஒன்றில் பாராளுமன்றச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட அல்லது நிறுவகத்தின் சபையினால் அத்தகையதென அங்கீகரிக்கப்பட்ட நூலக மற்றும் தகவல் அறிவியல்கள் துறையிலுள்ள கழகம், கல்லூரி அல்லது வேறு ஆட்கள் குழு என்று பொருளாகும்;

"பல்கலைக்கழகங்கள்" என்பது, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட பல்கலைக்கழகங்கள் என்று பொருளாகும்;

"இலங்கை நூலக கழகம்" என்பது, 1974 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை நூலகக் கழகம் என்று பொருளாகும்.

5-07

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.